

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (29.08.2025) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் விரைவில் முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்காக ஒப்பந்ததாரர்கள், கட்டிட வல்லுநர்கள், பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, நா.ரவிக்குமார், தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர்கள் மா.பாலமுருகன், ராஜன்பாபு மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பஞ்சாப் மாநிலத்தில் வெள்ளம்:

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு மாத சம்பளம் வழங்கும் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள்!

சண்டிகர்,ஆக.30-

பஞ்சாப் மாநிலத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காகத் திரட்டப்படும், அம்மாநில முதல்வர் வெள்ள நிவாரண நிதிக்கு காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் தங்களது ஒரு மாத சம்பளத்தை வழங்குவதாக அறிவித்துள்ளனர்.

பஞ்சாபில், பெய்த கனமழையால் அங்குள்ள சட்லெஜ், ரவி உள்ளிட்ட நதிகளில் வெள்ளம் ஏற்பட்டு, ஏராளமான வீடுகள் மற்றும் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால், பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு, அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உதவிகளை அம்மாநில அரசு செய்து வருகின்றது.

இந்நிலையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்காக திரட்டப்படும் முதல்வர் வெள்ள நிவாரண நிதிக்காக, அம்மாநில காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவரும் தங்களது ஒரு மாத சம்பளத்தை வழங்க முடிவு செய்துள்ளதாக, பஞ்சாப் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் எம்.எல்.ஏவுமான பஜ்வா தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான், அவரது அமைச்சரவை உறுப்பினர்கள் உள்பட ஆம் ஆத்மி சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவரும் தங்களது ஒரு மாத சம்பளத்தை வெள்ள நிவாரண நிதிக்காக வழங்குவதாகக் கூறியுள்ளனர்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள பஞ்சாப் மாநிலத்தில், அனைவரும் ஒன்றிணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளார்.



பல்லாவரம் தொகுதி புனித தோமையார் மலை ஒன்றியம் பொழிச்சலூர் ஊராட்சி பகுதியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை மாவட்ட கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்து பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று அந்தந்த துறைகளுடன் வழங்கி தீர்வு கண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அப்போது ஊராட்சி ஒன்றிய துணை தலைவர் வனஜா தயாளன் துணைத் தலைவர் ஜோசப் ஊராட்சி ஒன்றிய மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### தமிழ்நாட்டில் — ‘அனைவருக்கும் ஐ.ஐ.டி.’ திட்டத்தின்கீழ்

## சென்னை - ஐ.ஐ.டி.யில் 381 அரசுப் பள்ளி மாணவர்கள் கல்வி பயிலும் வாய்ப்பு!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!

சென்னை, ஆக. 30 -

அனைவருக்கும் ஐ.ஐ.டி. திட்டத்தின்கீழ் சென்னை ஐ.ஐ.டி. பி.எஸ். தரவு அறிவியல், எலக்ட்ரானிக்ஸ் சிஸ்டம் ஆகிய இணையவழி படிப்புகளை 2022-ஆம் ஆண்டில் அறிமுகம் செய்தது. இதற்கென பிரத்யேக நுழைவுத் தேர்வை ஐ.ஐ.டி. நடத்துகிறது.

அந்த தேர்வில் வெற்றி பெறுபவர்கள் இந்த 2 படிப்புகளை இணைய வழியில் படித்துக் கொள்ளலாம். வேலைவாய்ப்புக்கு உத்தரவாதமுள்ள இந்த படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களை அதிகளவில் சேர்க்க ஏதுவாக பள்ளிக்கல்வித் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த படிப்புகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அதற்கான தகுதித் தேர்வுக்கு தயார்ப்படுத்தும் பணிகளும் தமிழ்நாடு அரசால் முன்னெடுக்கப்படுகின்றன. தேர்வாகும் மாணவர்களின் பெற்றோர் வருமானம் ஆண்டு ஒரு லட்சம் ரூபாய்க்கும் குறைவாக இருந்தால், அவர்களின் கல்விக் கட்டணத்தில் 75 சதவீதத்தை ஐ.ஐ.டி.யே வழங்குகிறது. மீதமுள்ள 25 சதவீ தத்தை எஸ்.சி., எஸ்.டி. மாணவர்களாக இருப்பின் அவர்களுக்கான கட்டணத்தை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் செலுத்துகிறது. மற்ற பிரிவினர் அந்த 25 சதவீத கட்டணத்தை மட்டும் செலுத்தினால் போதும். இணைய வழி கற்றல் என்பதால் இதனுடன் சேர்த்து வேறு படிப்புகளையும் மாணவர்கள் தொடரலாம். அதாவது, ஒரேநேரத்தில் 2 பட்டப் படிப்புகளை மாணவர்கள் முடிக்கலாம். இத்திட்டத்தின் கீழ் 2022 முதல் இதுவரை 353 அரசுப் பள்ளி மாணவர்கள் அன் பலன் பெற்றுள்ளனர். தொடர்ந்து நடப்பாண்டிலும் இந்த படிப்புகளில் சேர 170 பேர் தகுதித் தேர்வை எழுதினர்.

அதில் 28 பேர் வெற்றி பெற்று, சென்னை ஐ.ஐ.டி.யில் பி.எஸ், தரவு அறிவியல், எலக்ட்ரானிக்ஸ் சிஸ்டம் படிப்புகளில் சேர இருக்கின்றனர்.

இதனிடையே, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தும் திட்டங்களின் துணையோடு அரசுப் பள்ளி மாணவச் செல்வங்கள் கல்வியில் உயரங்களை எட்டிப்பிடித்து சாதனை படைக்கிறார்கள் என்று தெரிவித்துள் ளார். அந்த வகையில், அனைவருக்கும் ஐ.ஐ.டி. திட்டத்தின் கீழ் நமது அரசுப் பள்ளி மாணவர்கள் 28 பேர் ஐ.ஐ.டி. மெட்ராஸ் நிறுவனத்தில் இணைந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வதாகவும், மாணவச் செல்வங்களுக்கு அன்பு வாழ்த்துகள் என்றும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

### கொளத்தூர், கபாலீசுவரர் கலை – அறிவியல் கல்லூரிக்கு குத்தகைக்கு இடம் வழங்கியது தொடர்பான வழக்கு:

## ‘கோவில் நிதியை கல்விக்காகப் பயன்படுத்தினால் என்ன தவறு?’

### உச்சநீதிமன்றம் கேள்வி! வழக்கை தள்ளுபடி செய்தது!

சென்னை,ஆக.30-

கொளத்தூர், கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டிட கொளத்தூர் சோமநாத சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான நிலத்தினை 25 வருட குத்தகைக்கு சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு வழங்குவது தொடர்பாக இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்களால் ஆட்சேபணை கோரி வெளியிடப்பட்ட விளம்பர அறிவிப்பை எதிர்த்து டி.ஆர். ரமேஷ் என்பவர் தொடர்ந்த வழக்கு (W.P. 29684/2024) கடந்த 3.10.2024 அன்று மாண்புமிகு நீதியரசர் தண்டபாணி அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டது.

மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து டி.ஆர். ரமேஷ் தொடர்ந்த மேல்முறையீட்டு மனு WA 105/ 2025 மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மாண்புமிகு நீதியரசர்கள் ஆர். சுப்பிரமணியம் மற்றும் சி. குமரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் கடந்த 24.2.2025 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி வழக்கு தீர்ப்புக்கு எதிராக மாண்பமை உச்சநீதிமன்றத்தில் டி.ஆர். ரமேஷ் என்பவர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு இன்று (29.08.2025) விசாரணைக்கு வந்தது. இவ்விசாரணையின் போது உச்சநீதிமன்ற நீதியரசர்கள் விக்ரம்நாத் மற்றும் சந்தீப் மேத்தா ஆகியோர் திருக்கோயில் மூலம் கல்லூரி நடத்தப்படுவது நல்ல நோக்கம் தானே, இதில் தவறேதுமில்லை எனவும், பொதுமக்கள் நலன்கருதி தானே நடத்தப்படுகிறது, அதனை தடுக்க நீங்கள் யார், இதனால் உங்களுக்கு என்ன பாதிப்பு என்று கேட்டு வழக்கை தள்ளுபடி செய்தனர்.

### வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 6.18 கோடி மதிப்பில்

## திருவொற்றியூர் விம்கோ நகரில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் கட்டும் பணி!

### கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்! கே.பி.சொக்கலிங்கம் முன்னிலை!

சென்னை, ஆக.30-

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.6.18 கோடி மதிப்பில் கட்டப்பட உள்ள புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் (ஐ.டி.ஐ.) கட்டும் பணியை மாநில மீனவரணி துணைத் தலைவர், திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் துவக்கி வைத்தார்.

திருவொற்றியூர் தொகுதி மக்களுக்கு திராவிட மாடல் அரசின் சிறப்புப் பரிசாக வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ. 6.18 கோடி மதிப்பில் கட்டப்பட உள்ள புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் (ITI) கட்டும் பணியை முதல்வர் ந.செந்தில்குமார் வரவேற்பில், 5வது வட்டக் கழக செயலாளர் கே.பி.சொக்கலிங்கம் முன்னிலையில் விம்கோ நகர், திருவொற்றியூர் அரசு புதிய கலைக் கல்லூரி அருகில் மாநில மீனவரணி துணைத் தலைவர், திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தலைமை கழக செயற்குழு உறுப்பினர் வி.ராமநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா. முருகேசன், மத்திய பகுதி பொருளாளர் எம்.எஸ்.நாகலிங்கம் வட்டக் கழக செயலாளர் ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதி கே. கார்த்திகேயன்,.

மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே.தேசிங்கு, துணை அமைப்பாளர்கள் எஸ்.கே.இளங்கோ, ஆர். குமரன், வி.கே.ஏழுமலை, மாவட்ட சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் எம்.அமிர்தராஜ், தொண்டரணி எம்.எஸ். ரவி, தயாநிதி, குடியரசு, , எம்.டி.சி. லோகநாதன், சண்முகம், மகளிர் அணி ராதா, எஸ்.விஜயராகவன், இளைஞரணி கார்த்திக், ராஜா, இ.பி.பிரேம், கொள்கை மணி, கஜா, கணேசன்,

5வது வட்ட நிர்வாகிகள் வே.கோபால், கே.ரமேஷ், கோவிந்தசாமி, விஜயலட்சுமி, டி.எஸ்.பாபு, அலெக்ஸ், கோ.கஜேந்திரன் என்.தன்ராஜ், பீட்டர், எம். பி.வசந்த், ஆர்.சிங்காரவேலு, பி.ரவி, வேலாயுதம், எம்.ஜோதி, ஆர்.எம்.செல்வம், எஸ்.சுப்பிரமணி, டி. எம்.எல்லன், டெய்லர் மணி, எஸ்.எல்லப்பன், ஜே.விஜயா, வைகை சிவா, சேகர், எல்லன்,

திருவொற்றியூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய அலுவலக மேலாளர் கோவிந்தநாதன், துணை இயக்குநர் டி.ராதா கிருஷ்ணன், உதவி பயிற்சி அலுவலர் நாகலிங்கம், உதவி பயிற்சி அலுவலர் மோகன் தாஸ்,

வடசென்னை அரசினர் தொழிற்பயிற்சி நிலைய இளநிலை பயிற்சி அலுவலர் பாண்டித்துரை, பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் சங்கரன், ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் பாலாஜி மற்றும் அரசு அலுவலர்கள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் மத்திய மாவட்டப் பொருளாளர்

## ஜனகராஜ் தந்தை இராஜாமணி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 30-

விழுப்புரம் மத்திய மாவட்டப் பொருளாளர் ஜனகராஜின் தந்தை இராஜாமணி அவர்கள் இயற்கை எய்திய செய்தி அறிந்து. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொருளாளர் ஜனகராஜ் அவர்களின் தந்தையார் இராஜாமணி அவர்கள் மறைந்த செய்தியால் வேதனையடைந்தேன்.

உணர்வூட்டி வளர்த்த அன்புத் தந்தையினை இழந்து தவிக்கும் ஜனகராஜ் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



உங்களுடன் ஸ்டாலின் என்ற முன்னெடுப்பின் கீழ் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி பூண்டி ஒன்றியத்திற்குட்பட்ட நம்பாக்கம், அறியத்தூர், வெள்ளாத்துகோட்டையில் நடைபெற்ற திட்ட முகாமில் கழக மாநில தகவல் தொழில்நுட்ப அணி துனை செயலாளர் சி.எச்.சேகர் மக்களுக்கான தேவைகளை மனுக்களாகப் பதிவு செய்து உடனடியாக விண்ணப்பித்தவர்களுக்கு சான்றிதழ்கள் அரசு சார்பில் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார். இதில் பூண்டி வடக்கு ஒன்றிய செயலாளர் ஜான்பொன்னுசாமி, பூண்டி முன்னாள் ஒன்றிய செயலாளர் வேணுகோபால், திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி துனை அமைபாளர் மோதிலால், கிளை செயலாளர்கள் ஞானவேல், சுப்பிரமணி, சகாயம், தகவல் தொழில்நுட்ப அணி கும்முடிப்பூண்டி தொகுதி ஒருங்கினைப்பாளர் ஞானமுத்து மற்றும் கழக நிர்வாகிகள் சீனிவாசன், ஸ்ரீதேவி, குருமூர்த்தி, நாகபூசணம், சுரேஷ், வாசு, கோபி, மற்றும் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்பட அனைத்து அரசு துறை அதிகாரிகள் உள்ளனர்.

### சென்னை கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானத்தில்

## 8.66 மில்லியன் கன லிட்டர் தண்ணீர் தேக்கக் கூடிய அளவிற்கு வெட்டப்பட்ட 4 குளங்கள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

சென்னை, ஆக.30-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (29.08.2025) சென்னை, கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள 4 குளங்களின் கொள்ளவு 2 மடங்காக அதிகரிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

வடகிழக்கு பருவமழை எதிர்நோக்கியுள்ள இந்த தருணத்தில் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழை வருவதற்கு முன்பாகவே தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒட்டுமொத்த சேவை துறைகளுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தி ஒவ்வொரு துறையும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தான அறிவுரைகள் வழங்கி அந்த பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில் இந்த ஆண்டு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சேவை துறைகளுடனான கூட்டம் இந்த மாதம் நடைபெற்று முடிந்துள்ளது. தொடர்ந்து முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் சென்னையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் மழைநீர் தேக்கக்கூடிய புதிய பணிகளை தொடர்ச்சியாக ஆய்வு செய்து வருகிறார்கள்.

அந்த வகையில் கிண்டி ரேஸ் கோர்ஸ் வளாகத்தில் கடந்த ஆண்டு இந்த பகுதியில் இருந்து வருகின்ற உபரி நீரால் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக சைதாப்பேட்டையில் இருக்கின்ற கிண்டி, பாரதியார் காலனி, வேளச்சேரி, மடுவன் கரை போன்ற பல்வேறு பகுதிகள் பெரிய பாதிப்புக்குள்ளானது.

இதனை கருத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானத்தை அரசு கையகப்படுத்தி 4.77 மில்லியன் கன லிட்டர் மழைநீர் கொள்ளளவு தேக்கக்கூடிய வகையில் 27,647 சதுர மீட்டர் பரப்பளவில் புதிய குளங்களை இங்கே உருவாக்கப்பட்டு மழைநீர் தேக்கி வைக்கப்பட்டது. அதனால் திறந்த வெளியிலிருந்து வருகின்ற மழைநீர் பொறுத்த வரை அக்கம் பக்கத்தில் உள்ள குடியிருப்புதாரர்களை பாதிப்புகளுக்கு உள்ளாக்காமல் இருந்தது.

இந்த நிலையில் மீண்டும் முதலமைச்சர் அவர்கள் பெரிய அளவில் மழை பொழிந்தாலும் அதனை தாங்கும் அளவிற்கான சக்தி கொண்ட குளங்களை உருவாக்குவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிட்டு அந்த வகையில் சென்னை மாநகராட்சி சார்பில் குளங்கள் தோண்டப்பட்டது. அந்த வகையில் இன்று 49,772 சதுர மீட்டர் பரப்பளவில் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நான்கு குளங்களும் பெரிய அளவில் நீர்த்தேக்கம் செய்யக்கூடிய அளவில் இருந்தாலும், இந்த ஆண்டு இங்கு மழை பொழிவு இருக்கும்போது தற்போது 8.66 மில்லியன் கன லிட்டர் மழைநீர் தேக்கி வைப்பதற்கான குளங்கள் இப்போது பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. இது தென் சென்னை குடியிருப்பு பகுதிகளுக்கு மழை நீர் புகாத வண்ணம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

சென்னையை பொருத்த வரை 3081 கி.மீ தூரத்திற்கான மழைநீர் வடிகால்வாய்கள் இருக்கின்றது. இந்த 3081 கி.மீ கொண்ட மழைநீர் வடிகால்வாய்கள் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பருவமழை முன்பாக தூர்வாரப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்கு பிறகு, பெருநகர சென்னை மாநகராட்சி, நீர் வளத்துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து சென்னையில் கடந்த காலங்களில் எங்கேயெல்லாம் மழை நீர் தேக்கங்கள் இருந்ததோ அந்த பகுதிகளில் முற்றிலுமாக மழைநீர் தேக்கம் இல்லாமல் ஆக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

அந்த வகையில் கடந்த 4.5 ஆண்டுகளில் மட்டும் ஏறத்தாழ 1000 கி.மீ நீளத்திற்கு புதிய மழைநீர் வடிகால் வாய்கள் கட்டும் பணிகள் நடைபெற்று முடிவடைந்து இருக்கிறது. இன்னமும் 600 கி.மீ தூரத்திற்கு மழை நீர் வடிகால் வாய்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒட்டுமொத்த பணிகளும் வடகிழக்கு பருவமழைக்கு முன்பாகவே முடிக்கப்படும்.

வடகிழக்கு பருவமழையினால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அண்மையில் கூட கோடை வெப்பமழை, வெப்பச் சலன மழை போன்ற ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் பெய்யக்கூடிய மழைகளினால் சென்னையில் பல்வேறு பகுதிகளில் 10 செ.மீ அளவிற்கு மழை பதிவாகியுள்ளது. கடந்த வாரம் கூட சென்னையில் பல்வேறு இடங்களில் 9 செ.மீ அளவிற்கு மழை பெய்தது. ஆனால் பாதிப்பு என்பது மழை பெய்து அரை மணி நேரத்திற்கு பின்பு மாநகர மக்கள் மழைநீர் பாதிப்புகள் இல்லாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே சொன்னது போல 20 செண்டிமீட்டர் அளவிற்கு மழை பெய்தால் கூட அதை தாங்கும் சக்தி கொண்ட நடவடிக்கைகளை பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொண்டு வருகிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, அடையாறு மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டையில் பூண்டி வடக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் கழக வழக்கறிஞர் எஸ்.என்.சாய்குமாரின் வழக்கறிஞர் அலுவலகத்தை முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் திறந்து வைத்தார். உடன் ஏ.வி.ராமமூர்த்தி, எஸ்.ரமேஷ், ஜான்(எ)பொன்னுசாமி, கே.வி.லோகேஷ், மு.பாஸ்கர், எஸ்.ராமஜெயம், கோல்டுமணி, ரஹீம், நா.சீனிவாசுலு, ஆர்.தில்லைகுமார், கே.விஜயன், சம்சுதீன், கே.வி.நாகராஜ், ஏ.சீனிவாசன், குமரேசன், டி.வேல்முருகன், கே.பாபு, டி.குருமூர்த்தி, ஏ.ராகவன், எஸ்.நாகபூஷனம், பிரபாகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.